**DEPOSITION OF WITNESS**
**Chapter XXIII Code of Criminal Procedure**
**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE**
**NAGAPATTINAM.**
**C.C. 01/2018** P.W. 23

Deposition of witness for Prosecution:

Name : திரு. சரவணன் Father's Name .

Village :. Age .

Date : 21.01.2023

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 day of 21.01.2023

**சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு அரசு தரப்பு முதல் விசாரணை தொடர்ச்சி.**

நான் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை அதசாஆ.10 ஆகும். அதன் அசலையும் தொடர்புடைய ஆவணங்களையும் மாண்புமிகு தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றத்திற்கு அனுப்பிவைத்தேன். அன்றைய தினம் 15 மணிக்கு இவ்வழக்கின் சம்பவ இடத்தை ஏற்கனவே வேளாங்கன்னி காவல் ஆய்வாளர் திரு. பழனிச்சாமி அவர்கள் பார்வையிட்டு தயார் செய்த மாதிரி வரைபடம் பார்வை மகசர் சாட்சிகள் 1. ராஜா, 2. தேவேந்திரன் ஆகியோர்கள் முன்னிலையில் பார்வையிட்டதில் சம்பவத்தின் போது பார்வையிட்ட மாதிரி வரைபடம் பார்வை மகசரை ஒத்து இருந்ததால் நான் தனியாக தயார் செய்யவில்லை. பின்னர் மேற்படி சாட்சிகள் 1. ராஜா, 2. தேவேந்திரன் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் 21.10.2016 அன்று சாட்சிகள் திருமதி அல்போன்சாராணி, திருமதி ஷிலா ஆகியோர்களை பெண் த.காவர் 581 செல்வி அவர்கள் உதவியுடனும் சாட்சி திருமாறன் அவர்களையும் விசாரித்து அவர்களது வாக்குமூலங்களையும் பதிவு செய்தேன். 24.10.2016 ம் தேதி இவ்வழக்கின் புகார்தாரர் திருமதி ஜெயந்தி கடத்தப்பட்ட குழந்தையின் தாயார் சுகன்யா ஆகியோர்களை பெண் த.காவர் 581 செல்வி அவர்கள் உதவியுடனும் சாட்சி ஷர்பர்அல் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் 8.11.2016 ம் தேதி சாட்சிகள் திருமதி சந்திரா அவரது கணவர் சபாபதி மற்றும் சாட்சி திரு ரபேல் ஆகியோர்களை விசாரித்து அவர்களது வாக்குமூலங்களையும் பதிவு செய்தேன். 13.11.2016 ம் தேதி ஆதரவற்ற குழந்தைகளுக்காக இல்லங்கள் நடத்திவரும் சாட்சிகள் அருள்மேரி

ஜெயராஜ், மேரிகிருஷ்துவராஜா ஆகியோர்களிடம் இவ்வழக்கின் கடத்தப்பட்ட குழந்தையின் புகைப்படத்தை காட்டி விசாரித்து வாக்குமூலபதிவு செய்தேன். 13.12.2016 ம் தேதி வாதியின் கணவர் திரு. பாஸ்கர் அவரது மகன் சுரேஷ் மற்றும் காவல் ஆய்வாளர் திரு. சுரேஷ்குமார் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் 15.12.2016 ம் தேதி சாட்சிகள் உதவி ஆய்வாளர் திரு. ராஜேஷ் சிறப்பு சார்பு ஆய்வாளர் திரு. சந்திரகாசன் மற்றும் முருகானந்தம் ஆகியோர்களையும் 18.12.2016 ம் தேதி சாட்சிகள் திருமதி அமராவதி, திருமதி ராக்கு (எ) ராக்காயி த.கா 581 திருமதி செல்வி ஆகியோர்களையும் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். மேலும் இவ்வழக்கில் 20.12.2016 ம் தேதி அன்று கடத்தப்பட்ட குழந்தையின் விபரங்கள் அடங்கிய நோட்டிசுகளை செய்திதாள்கள் உள்ளூர் தொலைகாட்சி மூலம் விளம்பரம் செய்ய நடவடிக்கை மேற்கொண்டேன். அதன் பேரில் கடந்த 22.12.2016 ம் தேதி தினகரன் மற்றும் தினமலர் செய்திதாள்களிலும் 30.12.2016 ம் தேதி நியூஇந்தியா எக்ஸ்பிரஸ் செய்திதாளிலும் வந்திருந்தது. மேலும் மேற்சொன்ன விளம்பர நோட்சுகளை கடந்த 10.01.2017, 11.01.2017, 03.2.2017, 4.2.2017, 5.2.2017 15.02.2017, 17.02.2017, 19.02.2017, 24.02.2017, மற்றும் 11.03.2017 ஆகிய தேதிகளில் திருச்சி, வேளாங்கன்னி, திண்டுக்கல், பழனி, பழனி அடிவாரம், திருவாரூர், நாகூர், நீடாமங்களம், நாகப்பட்டினம், காரைக்கால், திருத்துறைப்பூண்டி, கருர், ஈரோடு மற்றும் அதன் சுற்றப்புற பகுதிகளை காண்பித்து தகவல் அளிக்க நடவடிக்கைகள் மேற்கொண்டேன். 21.12.2016, 22.12.2016 மற்றும் 23.12.2016 ஆகிய தேதிகளில் கடத்தப்பட்ட குழந்தை பற்றி தகவல் தெரிவிக்க திருவாரூர், நாகப்பட்டினம் மற்றும் தஞ்சாவூர் மாவட்ட அரசு கேபிள் டீ.வி மூலம் நடவடிக்கை மேற்கொண்டேன். மேலும் 01.01.2017 ம் தேதி அன்று சாட்சி திரு. சந்திரன் அவர்களை விசாரித்து அவரது வாக்குமூலம் பதிவு செய்தேன். 06.01.2017 ம் தேதி செய்தித்தாளில் வந்த செய்தியின்பேரில் சிபிசிஐடி அலுவலகம் வந்த சாட்சிகள் திரு. முத்துக்குமார், திரு. கோபாலகிருஷ்ணன் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். 13.01.2017 அன்று சாட்சி திரு. வெள்ளக்கண்ணு (எ) பாண்டியன் என்பவரையும் 23.01.2017 ம் தேதி சாட்சிகள் திருமதி. சின்னம்மா, மகாலெட்சுமி, கார்திக் மற்றும் விக்ரம் ஆகியோர்களையும்

விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். 27.01.2017 அன்று தலாஸ் படிவம் பூர்த்தி செய்து கடத்தப்பட்ட குழந்தையினை கண்டுபிடிக்க நாகப்பட்டிம் மாவட்ட குற்ற ஆவண பதிவுகூடத்தின் மூலம் நடவடிக்கை எடுத்தேன். பின்னர் 12.02.2017 ம் தேதி அன்று சாட்சி திரு. அலெக்சாண்டர் அவர்களையும் 17.03.2017 அன்று சாட்சி திரு. வடிவேல் ஆகியோர்களையும் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். இவ்வழக்கின் கடத்தப்பட்ட பெண் குழந்தையையும் எதிரிகள் லெட்சுமி மற்றும் ஈஸ்வரன் ஆகியோர்களை தேடிவந்தபோது கடந்த 23.03.2017 ம் தேதி காலை 10 மணிக்கு நாகப்பட்டினம் புத்தூர் அண்ணாசிலை பஸ் நிலையத்தின் அருகில் இருந்த பின்னால் பெயர் விலாசம் கேட்டுதெரிந்த லெட்சுமி (எ) விஜி (எ) விஜயலெட்சுமி த/பெ. மாயாண்டிபிள்ளை க.எண்.29 ஏ, சாமிநாதன் நகர் பவர்கவுஸ் சமயநல்லூர், தற்போது 36 ஏ போஸ்டாபிஸ்ரோடு அடிவாரம் பழனி என்பவரை கைது செய்து சாட்சிகள் சைல்டு லைன் அமைப்பு உறுப்பினர்கள் 1. திருமதி ராஜாத்தி, 2. திருமதி ஜெனோவாசெல்வி ஆகியோர்கள் முன்னிலையில் விசாரிக்க மேற்படி எதிரி எந்தவித துன்புறுத்தலும் அச்சுறுத்தலுமின்றி தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தினை பதிவு செய்தேன். அதில் நான் மேற்படி எதிரி மற்றும் சாட்சிகள் இருவரும் கையொப்பம் செய்தோம். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி அதசாஆ.11 ஆகும். பின்னர் மேற்படி சாட்சிகள் முன்பு மேற்படி எதிரி அன்றைய தினம் பகல் 11.45 மணிக்கு அந்தனப்பேட்டை ரயில்வே நிலையத்தில் அடையாளம் காண்பித்த 2வது எதிரி ஈஸ்வரன் என்பவரை கைது செய்து அவரிடமிருந்த கடத்தப்பட்ட பெண் குழந்தையை மீட்டு எதிரிகள் கடத்தப்பட்ட குழந்தை மற்றும் போலிஸ் பார்ட்டி சகிதம் 12.45 மணிக்கு சிபிசிஐடி அலுவலகம் வந்து எதிரியின் உறவினர்களுக்கு தகவல் தெரிவித்து கைது நமுணா தயார் செய்து எதிரிகளை திரேக பரிசோதனை செய்து நிலைய பாராவில் காவலுக்கு உட்படுத்தினேன். பின்னர் தகவலின் பேரில் சிபிசிஐடி அலுவலகம் வந்த சாட்சிகள் 1. கோபாலகிருஷ்ணன், 2. முத்துகுமார், 3. ரபேல், 4. சந்திரா ஆகியோர்கள் மேற்படி எதிரிகளையும் கடத்தப்பட்ட குழந்தையையும் அடையாளம் காண்பித்து ஊர்ஜிதம் செய்தார்கள். அவர்களை மீண்டும் விசாரிக்க அவர்களது மறு வாக்குமூலத்தை பதிவு செய்தேன். பின்னர் எதிரிகளையும்

கடத்தப்பட்ட குழந்தையையும் தக்கல் வழிக்காவல் மூலம் நீதிமன்தற்தில் ஆஜர்படுத்தினேன். தகவலின் பேரில் வாதி ஜெயந்தி கடத்தப்பட்ட குழந்தையின் தாயார் சுகன்யா ஆகியேர்களை நீதிமன்றத்தில் ஆஜரரானவுடன் மேற்படி நீதிமன்றத்தில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டு அவர்கள் வசம் கடத்தப்பட்ட குழந்தை ஒப்படைக்கப்பட்டது. இவ்வழக்கில் கடத்தப்பட்டு மீட்கப்பட்ட 21 மாத பெண் குழந்தைக்கும் அவரது தாயார் சுகன்யா என்பவருக்கும் டிஎன்ஏ பரிசோதனை செய்ய நடவடிக்கை மேற்கொண்டு கடந்த 27.03.2017 ம் தேதி இந்நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்து சென்னை தடய அறிவியல் ஆய்வகத்தில் இருந்து சிபிசிஐடி அலுவலக த. கா 1304 பொய்யாமொழி அவர்கள் மூலம் பிளட் கார்டு பெற்று கடந்த 30.03.2017 ம் தேதி இந்நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்பட்டது. பின்னர் கடந்த 03.04.2017 ம் தேதி இந்நீதிமன்றத்தின் மூலமாக கடத்தப்பட்ட குழந்தைக்கும் அதன் தாயார் சுகன்யாவுக்கும் டிஎன்ஏ பரிசோதனைக்கு ரத்த மாதிரிகள் எடுக்க அனுப்பிவைத்து பெண் காவலர் சாவித்திரி அவர்கள் உதவியுடன் ரத்த மாதிரிகள் சேகரித்தும் மீண்டும் இந்நீதிமன்றம் மூலமாக தடய அறிவியல் ஆய்வகத்தில் ஒப்படைத்தும் கேஸ் நம்பர் டிஎன்ஏ/டிஏடி/35/2017, நாள் 4.4.2017 ன் படி மேற்படி பெண் காவலர் சாவித்திரி அவர்களால் ஒப்படைக்கப்பட்டது. மேலும் 3.4.2017 ம் தேதி மீண்டும் வாதி ஜெயந்தி மற்றும் கடத்தப்பட்ட குழந்தையின் தாயார் ஆகியோர்களை விசாரித்து அவர்களது வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் 6.4.2017 ம் தேதி உதவி மருத்துவர் திருமதி. சுபா அவர்களையும் 12.04.2017 ம் தேதி சாட்சிகள் திருமதி ராஜாத்தி, ஜெனோவா செல்வி, ஆகியோர்களையும் 17.04.2017 ம் தேதி சாட்சிகள் பெண் காவலர் 908 சாவித்திரி த.கால் 1304 பொய்யாமொழி ஆகியோர்களையும் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். 03.07.2017 ம் தேதி சென்னை தடய அறிவியல் ஆய்வகத்தில் வழங்கிய மேற்சொன்ன டிஎன்ஏ வழக்கு எண் அறிக்கை நகல் இந்நீதிமன்றத்தின் மூலம் பெற்று அதன் பேரில் 5.9.2017 ம் தேதி சென்னை தடய அறிவியல் ஆய்வக உதவி இயக்குனர் மரு. திலகா அவர்களையும் 26.10.2017 ம் தேதி சாட்சி காவல் ஆய்வாளர் பழனிச்சாமி அவர்களையும் விசாரித்து வாக்குமூலங்கள் பதிவு செய்தேன். தடய அறிவியல் ஆய்வறிக்கையின்படி கடத்தப்பட்ட குழந்தை

டிஎன்ஏ பரிசோதனையில் சுகன்யா என்பவர் குழந்தை என்று உறுதி செய்யப்பட்டு ஆய்வறிக்கை வழங்கப்பட்டுள்ளது. அந்த ஆய்வறிக்கை அதசாஆ.12. ஆகும். இவ்வழக்கில் எனது விசாரணையில் இருந்தும் மேற்படி சாட்சிகள் வாக்குமூலங்களிலிருந்தும் சான்றாவணங்களிலிருந்தும் எதிரிகள் லெட்சு (எ) விஜி (எ) விஜயலெட்சுமி மற்றும் ஈஸ்வரன் ஆகியோர்கள் இருவரும் சுமார் 9 மாத குழந்தையை கடத்தி வாதி மற்றும் அவரது மகளிடமிருந்து பிரித்து வாதி ஜெயந்தி அவரது மகள் சுகன்யா மற்றும் அவர்களது 9 மாத குழந்தைக்கு மன உளைச்சலையும் கொடுமையையும் உண்டு பண்ணிய குற்றத்திற்காக மேற்படி எதிரிகள் மீது சட்ட பிரிவுகள் 363 இதச @ 363 இதச மற்றும் 75 JJ Act 2015 ன் படி 27.10.2017 ன்படி குற்றப்பத்திரிக்கை தயார் செய்து மாண்புமிகு தலைமை குற்றவியில் நடுவர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேன்.

**எதிரிதரப்பு குறுக்கு விசாரணை வேண்டுகோளுக்கிணங்க ஒத்திவைக்கப்படுகிறது.**